மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 16–ம் நாள் செவ்வாய்கிழமை

அ.வ.எண்.72/24

பி.சா.2

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

-----------------------------------------------------------------------

பெயர்: தியாகராஜ் தேதி : 16.06.26
வயது : த/பெ : பால்ராஜ்
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

-----------------------------------------------------------------------

<u>16.06.26 குறுக்கு விசாரணை</u>

1.வாதி என் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். பிரதிவாதி என் சித்தப்பா மகள் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார் என்றால் தாவா இடம் அவருக்கு வேண்டும் என்று கேட்டுள்ளார். சங்கர நாடார் என்ற ரத்தினசாமி என் தாத்தா என்றால் சரிதான். அவருக்கு ஜெபமணி, நவமணி, பால்ராஜ் மற்றும் துரைராஜ் ஆகியோர் மகன்கள் ஆவர்.

2.சங்கர நாடார் என்ற ரத்தினசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அதன் பிறகு சங்கர நாடார் என்ற ரத்தினசாமியின் வாரிசுகள் தான் அவரது சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். சங்கர நாடார் என்ற ரத்தினசாமியின் மகன் தான் பால்ராஜ் என்றால் சரிதான். அந்த பால்ராஜ் எனது தந்தை என்றால் சரிதான்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.16 19:21:41 +0530

3.என் தந்தைக்கு நான், மோசஸ், டேவிட் மற்றும் வாதி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். என் தந்தை இறந்தபிறகு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது வாரிசுகளான நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். எங்களுடன் சேர்ந்து எங்கள் தாயாரும் எங்கள் தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். ஆனால அவர் இறந்துவிட்டார். வழக்கு சொத்து மொத்தம் 5.5 செண்ட் என்றால் சரிதான்.

4.மேற்படி 5.5 செண்டில் ஆண்மக்கள் தலா ஒரு செண்டும், என் அம்மாவுக்கு ஒரு செண்டும் பிரித்தது போக 0.5 செண்ட் பாதைக்கு சென்றுவிட்டது என்றால் 5.5 செண்டினை நாங்கள் சமமாக பிரித்து கொண்டோம். என் அம்மா உடல்நிலை சரியில்லாமல் இருந்த நிலையில் வாதி மட்டும் தான் அவரை பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. எல்லாரும் தான் பராமரித்து வந்தோம். எல்லோரும் பராமரித்து வந்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆளுக்கு ஒரு மாதம் பராமரித்து வந்தோம்.

5.வாதி என் அம்மாவை பராமரித்து வந்ததால் வழக்கு சொத்தில் 2ம் தபசில் சொத்தினை என் அம்மா வாய்மொழியாக வாதிக்கு கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்தில் ஆடு, மாடுகள் வைத்தும், உடைந்த பொருட்களை போட்டும் வாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்தினை வாதியிடம் கிரையம் கேட்டு தர மறுத்ததால் நான் அவர் மீது குற்ற வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.16 19:21:45 +0530

6.வாதிக்கும் எனக்கும் பேச்சுவார்த்தை உண்டா என்றால் கிடையாது. வாதி 2ம் தபசில் சொத்தினை எனக்கு கிரையம் தர மறுத்ததால் அவர் மீது காழ்புணர்ச்சி கொண்டு பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் சகோதரர்கள் அனைவருக்கும் தெரிய 2ம் தபசில் சொத்தினை வாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.16 19:21:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.